www.padippakam.com


# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவராண்டு 2011
புரட்டாதி 12
ஜுகஃ 17
ஞாயிறு (28-9-1980)
நிறுவியது 1947
புத்தகம் 34
இதழ் 35
விலை சதம் 1-00


## லண்டன் தீர்மானத்துக்கு ஓர் முன்னோடி

# தமிழ் ஈழத்துக்கான அரசியல்நிர்ணயசபை

## ஆறு மாதங்களில் கூட்டப்படவேண்டுமென அமெரிக்க ஈழத் தமிழர் இயக்கம் இடித்துரை!

"In keeping with world opinion, and in concurrence with Eelam Tamil movemnt, all over the world, we urge our leaders in Eelam to cease wasting time and to commence the formulation of—

★ The boundaries of the Republic of Eelam

★ The constituent assembly for drafting of the constitution of the Republic of Eelam.

★ The economic blue print for the development of Republic of Eelam.

These measures may begin on March 31—1981 the birthday of our great leader Mr, S, J. V, Chelvanayakam..."

காலத்தை வீணடிக்காது, உலக அபிப்பிராயத்துக்கும், உலகடங்கிலுமுள்ள ஈழவிடுதலை இயக்கங்களின் ஒருமித்த கருத்துக்கும் செவிசாய்த்து, ஈழத்திலுள்ள எமது தலைவர்கள், உத்தேச தமிழீழக் குடியரசின் எல்லைகளை வகுக்கவும் தமிழ் ஈழக்குடியரசின் அரசியல் யாப்பைத் தயாரிக்கவும், தமிழ் ஈழக் குடியரசின் பொருளாதாரத் திட்டங்களை வகுக்கவும், தமிழ்ஈழத் தந்தை மூதறிஞர் தந்தை செல்வா அவர்களின் 83ஆவது பிறந்தநாளான 31-3-1981இல் தமிழ் ஈழத்துக்கான அரசியல்நிர்ணய சபையைக் கூட்டுவதற்கான நடவடிக்கையில் இறங்க வேண்டுமென அமெரிக்காவிலுள்ள ஈழத்தமிழர் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மசசூசெற்ஸ் மாநிலப் பாராளுமன்றத்திலும், சோமர் வில்லி மாநகரசபையிலும், தமிழீழ ஆதரவு தீர்மானம் நிறைவேற்றப்படவும், அமெரிக்க காங்கிரசில் தமிழீழ விடுதலையை ஆதரிக்கும் தீர்மானம் கொண்டு வரப்படவும் காரணமாக விளங்கியது பொஸ்டனில் உள்ள ஈழத்தமிழர் இயக்கம் என்பது தெரிந்ததே.

இந்த இயக்கத்தின் செயற்குழுக் கூட்டம் 5-9-80இல் பொஸ்டனில் நடைபெற்ற போது அபிவிருத்திச் சபைகளால் ஈழத்திலும், சிறீலங்காவிலும் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து ஆராயப்பட்டது. இச்செயற்குழுக் கூட்டத்தில், ஆசியா, ஆபிரிக்கா ஐரோப்பா, அமெரிக்காவின் பலபகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் பங்குகொண்டனர்,

அபிவிருத்திச்சபைகளுக்கும், தமிழ் தேசிய இனத்தின் அபிலாஷைகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்று முடிவுசெய்யப்பட்டது,

"எமது விடுதலைக் கோரிக்கையை உலகம் முழுவதும் அறிந்து கொண்டுள்ளது: அரசுத்துறை,கைத் தொழில் துறை, வங்கித்துறை ஆகியவற்றைச் சேர்ந்தபொறுப்பு வாய்ந்த உலகத் தலைவர்கள் இதை ஏற்றுக்கொண்டுள்ளனர். சிறீலங்கா அரசு,எமது நாட்டைக் கைப்பற்றி அடக்கியாளுவது ஒரு இரகசிய உள்நாட்டுப்பிரச்சினையல்ல; இது இப்போது சர்வதேச முக்கியத்துவம் பெற்று விட்டது. இந்துசமுத்திரப்பிராந்தியத்தின் அமைதிக்கு இது நிரந்தர அபாயமாக விளங்கக்கூடியதென்பது பலராலும் உணரப்பட்டுள்ளது"

இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்ட இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன:

(i) அபிவிருத்திச் சபைக்கும், ஈழவிடுதலைக்கும் ஒரு தொடர்பும் இல்லையென்று சிறீலங்கா அரசும்,ஈழத்தலைவர்களும் பிரசாரம் செய்து வருவதால் அதுபற்றிஆராய்ந்துமேலும் காலத்தைக் கடத்தாமல், தமிழ் மக்களின் ஆணையாகியதமிழ் ஈழத்தை அடைவதற்கு முதல்நடவடிக்கையாக தந்தை செல்வாவின் 83வது பிறந்தநாளான 31-3-1981இல் தமிழ் ஈழத்தின் அரசியல் சாசனத்தை தயாரிப்பதற்கு தமிழ் ஈழ அரசியல் நிர்ணயசபையைக்கூட்டி நடவடிக்கை யெடுக்கும்படி தமிழ் மக்களையும் அவர்களின் பிரதிநிதிகளையும் வேண்டுகிறோம்.

இதற்கு இசைவான நடவடிக்கைகளை நாம் எமது இயக்கத்தின் சார்பில்வெளியில் இருந்து எடுக்கத் தீர்மானிக்கிறோம்;

(2) தமிழ் ஈழ அரசியல் சாசனத்தை எழுதுவதற்கு தமிழ் மக்களிடமிருந்தும். தலைவர்களிடமிருந்தும்சர்வதேச அரசியல்நிபுணர்களிடமிருந்தும் அவர்களின் அபிப்பிராயங்கள் உதவிகளை எழுத்துமூலம் சேகரிப்போம்.

(3) தமிழ் ஈழநாட்டின் எல்லைகளை வகுத்துவரையறுப்பதற்கும், பொருளாதாரத்திட்டங்களை வகுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்;

இத்தீர்மானங்களுக்குசர்வதேச ஆதரவைத்திரட்டவும் முடிவுசெய்யப்பட்டது:

லண்டன் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின்தீர்மானப்படி 1982 தைப்பொங்கலன்று தமிழீழஅரசாங்கம் உதயமாவதற்கு முன்னேடியாக, தமிழீழ எல்லைகளை வகுக்கவும், தமிழீழத்தின்அரசியல்யாப்பை எழுதவும், தமிழீழத்தின் பொருளாதார அமைப்புக்கான திட்டங்களை வகுக்கவும் தமிழ் ஈழ அரசியல் நிர்ணய சபை கூட்டப்பட வேண்டுமென்றஅமெரிக்க ஈழத்தமிழர் இயக்கத்தின்தீர்மானம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## இயக்கத்தின் மனச்சாட்சி

# சுதந்திரனே!

சுதந்திரன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அதிகார பூர்வமான ஏடல்ல; அதில் வரும் கருத்துக்கள் அனைத்தும் கூட்டணியின் உத்தியோக பூர்வமான கருத்துக்கள் அல்ல; ஆயினும் ஒன்றே ஒன்றை மட்டும் நான் இங்கு கூறுமல் இருக்க முடியாது. சுதந்திரன் ஆசிரியர் தம்பி கோவை மகேசனின் எழுத்துக்களே விடுதலை இயக்கத்தின் மனச்சாட்சியாக விளங்குகிறது. சுதந்திரனேவிடுதலை இயக்கத்தின் மனச்சாட்சி. சுதந்திரன் அச்சகம் தமிழ் ஈழத்துக்கு இடம் பெயர்ந்தது தமிழீழம் விரைவில் மலருவதற்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.



—த. வி. கூ. செயலாளர் நாயகம்

(சுதந்திரன் அ

## பிரேமதாசாவுக்கு வெளிநாடுகளில் எதிர்ப்பு

ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றச் சென்றுள்ள சிறீலங்காவின் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா வெளிநாடுகளிலுள்ள தமிழீழ விடுதலை இயக்கங்களின் பலத்த எதிர்ப்புக்களை சந்திக்கநேரிடலாமென்றுதெரிகிறது.

லண்டனில் வைத்து திரு. பிரேமதாசாவிடம்1982 தமிழீழப் பிரகடனத்தீர்மானம் கையளிக்கப்படலாமென்றும் கூறப்படுகிறது:

ஐ.நா, சபையில் உரையாற்றும் பிரதமரிடம் தமிழீழப் பிரச்சினை குறித்து நியூயார்க்கிலுள்ள பிரபல உலகப்பத்திரிகைகளின் நிருபர்கள் கேள்விக் கணைகளைத் தொடுக்க விருக்கின்றனர்.

படிப்பகம்




எஸ்: குமரன்
யாழ்ப்பாணம்

கே: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் எதிரே 13-9-80இல் நடைபெற்ற த.வி.கூ. செயலாளர் நாயகத்தின் பிறந்தநாள் கூட்டத்தில் சுதந்திரன் மீது வசைபாடப்பட்டதாமே?

ப: வாழ்க வசவாளர்கள்! மேற்படி பிறந்தநாள் கூட்டம்சம்பந்தமானசுவரொட்டிகளையும் துண்டுப் பிரசுரங்களையும் அச்சிடுவதற்கு தேவையான செயலாளர் நாயகத்தின்உருவப்படபுளக்குகளை சுதந்திரனே கொடுத்துதவியது; இதற்குப் பரிசுதான் வசைமாரியென்றால் அதுபற்றி சுதந்திரன் கவலைப்படமாட்டான்; இராசதுரை திட்டினார், தொண்டமான் திட்டினார். இராணுவப் படையோடு யோகேந்திரா துரைசுவாமி பாய்ந்தார், இவற்றுக்கெல்லாம் அஞ்சாத சுதந்திரன், தன்னால் வளர்க்கப்பட்ட ஒரு சிலரின் திட்டுதலுக்கா அஞ்சப்போகிறது? எக்கட்டத்திலும் சுதந்திரன் தனது பண்பாட்டை இழக்க மாட்டாது; கொள்கையையும் விட்டுக் கொடாது.

கே: அபிவிருந்திச் சபைகளுக்கும், தமிழ் ஈழத்துக்கும் சம்பந்தமில்லை என்கிற வாதம் சரியானதா?

ப: அபிவிருத்திச் சபைகள் தனியே சிறீலங்காவுக்கு மட்டும் கொண்டுவரப்பட்டிருந்தால் தமிழீழத்துக்கு அதிலேசம்பந்தமில்லைஎன்று கூறிவிடலாம்; ஆனால், சிறீலங்கா அரசு தமிழீழத்தையும் தன்னுடைய ஆட்சிக்குட்பட்ட பகுதியாகக்கருதி, தமிழீழத்துக்கும் சேர்த்தே அபிவிருத்திச் சபைகளை நிறுவுகிறது. இந்த நிலையில் அபிவிருத்திசபைகளுக்கும் தமிழீழத்துக்கும் தொடர்பு கிடையாதென்பதுஅர்த்தமற்றது. தமிழீழ மாவட்டங்கள், சிறீலங்காவின் இறைமைக்குப். சிறீலங்கா ஜனாதிபதியின் மேலாதிக்கத்துக்கும் உட்பட்ட பகுதிகள் என்பதையும் இலங்கை 24 மாவட்டங்கள் கொண்ட ஒரேநாடு என்பதையும் அபிவிருத்திச் சபைச் சட்டம்வலுப்படுத்துகிறது; அரசியலமைப்புச் சட்டவாக்கலிலும் நிறைவேற்றலிலும் பங்குபெறுமல் அதிலிருந்து ஒதுங்கி நின்று, தமிழீழத்தின் மீளப்பெற்ற இறைமை என்ற கற்பைக்காத்த கூட்டணி, அபிவிருத்திச்சபைச் சட்டத்திலும் அதே நிலையைக்கடைப்பிடித்திருந்தால், இறைமை எனும் கற்புக்கு ஊனம் ஏற்பட்டிருக்காது. அபிவிருத்திச் சபைகளை ஆதரித்து வாக்களித்ததன் மூலம், சிறீலங்கா ஜனாதிபதியின் அதிகாரங்கள், தமிழீழத்துக்கும் செல்லும்படியாகும் என்ற நிலைக்குத் தமது இசைவை அளித்துவிட்டனர் கூட்டணிப் பா.உக்கள்! தமிழீழத்திலிருந்து சிறீலங்கா ஏகாதிபத்தியத்தை விரட்டுவதற்குப் பதிலாக அதைமேலும் ஸ்திரப்படுத்துவதற்கு தமது சம்மதத்தை அளித்துள்ள கூட்டணியின் செயலை விடுதலை வாதிகள் நிராகரித்து விட்டனர்;

கே: அபிவிருத்திச் சபைகள் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வல்ல என்று கூட்டணி வட்டாரங்களில் கூறப்படுவதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப: தமிழ் ஈழத்தில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றம் தமிழ் மக்கள் கடந்த 30 ஆண்டுகளாக எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளிலொன்று; கூட்டணி பா: உக்கள் கூறுவதுபோல், அபிவிருத்திச்சபைகளால் சிங்களக் குடியேற்றப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்பது சரியானால், தமிழர்களின் அதிமுக்கிய பிரச்சினைகளிலொன்று தீர்ந்ததே?

* * *

எஸ். கந்தசாமி,
சுன்னாகம்

கே: தமிழினப் பிரச்சினை [illegible] தமிழினம் ஒரு தேசியஇனம் என்ற அடிப்படையில் பிரச்னைக்கு தீர்வு காண ஐ.தே.க. மறுக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சியோ தமிழ் மக்களின் பிரச்சினையை ஒரு தேசிய இனப்பிரச்சினையாக அங்கிகரித்து தமிழ் பகுதிகளுக்கு மட்டும் பிரதேச சுயாட்சி வழங்குவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம் என்று கருதுகிறது. தமிழ்மக்களோ தமிழீழத்துக்கு குறைந்த எதையும் ஏற்பதில்லை என்பதில் உறுதியுடன்நிற்கிறார்கள்;

கே: அபிவிருத்திச் சபைகளால் வெளிநாடுகளில் விடுதலை இயக்கம் செயலிழந்து விட்டதாகக் கூறும் அதே சுதந்திரன், தமிழீழ அரசு அமைப்பதற்கு லண்டனில் நாள் குறிக்கப்பட்ட செய்தியையும் வெளியிட்டுள்ளதே இதிலிருந்து வெளிநாட்டு இயக்கங்கள் சோர்வடைந்து விட்டதாக செய்யப்பட்ட பிரசாரம் தவறானது என்கிறேன்—உங்கள்பதில் என்ன?

ப; தமிழீழ அரசு நிறுவுவதற்கு லண்டனில் எடுக்கப்பட்ட தீர்மானத்தில், அபிவிருத்திச்சபைகள் தமிழ் மக்களை மேலும் மேலும் அடிமைத்தனத்துக்குள் தள்ளும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதை மறந்து விட்டீர்களா?

'The development councils bill passed by Sri Lanka parliament in august 1980 is devised andcunninglyintended to enslave the Thamil people for ever and ever''— என்பதாக லண்டன் தீர்மானம் கூறுகிறது;

* * *

வி: முத்தையா,
கொழும்பு - 13

கே: நாம் தமிழ் ஈழக் கொள்கையைக் கைவிடவில்லை; தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவே அபிவிருத்திசபைகளை ஆதரித்தோம் என்று கூட்டணி கூறுவது நியாயமானது தானே?

ப; கூட்டணி தமிழ் ஈழக் கொள்கையைக் கைவிடவில்லையானால், அது எந்த நிமிடத்திலும் சுதந்திரப் பிரகடனத்தை செய்யும்; அது நடைபெறுவதுஅடுத்தஆண்டாக இருக்கலாம் அல்லது 1982 பொங்கல்தினத்தன்று நடைபெறலாம்அப்படிஈழம் பிரகடனப் படுத்தப்படும் போது நிச்சயமாக சிறிலங்காவின் படைகள் தமிழீழத்தின்மீது போர் தொடுக்கும். அவ்வாறான கட்டத்தில் தமிழீழம் தனது சுதந்திரப் பாதுகாப்புக்கு எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடும். இத்தகைய மோதலின் விளைவாக தமிழீழத்தில் கூட்டணி அதுகாலவரை செய்த அபிவிருத்திகள் அனைத்தும்அழிக்கப்பட்டுவிடும்: இதனால் தான் தேசவிடுதலையை நிலைநாட்டிபாதுகாப்பைஉறுதிப்படுத்தியபின்பே, அபிவிருத்தியில் ஈடுபடுதல் நிலையானதாக அமையும் என்று கூறுகி[illegible] தமி[illegible]வும் [illegible]வில் எத்தனையோ தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்படவில்லையா; அடிமைத்தனத்தை துடைத்தெறியாமல் அபிவிருத்திபேசுவது அர்த்தமற்றது: அறிவற்றது. அது அழிவிலேயே முடியும்;

கே: அபிவிருத்திச் சபைகளால் திருகோணமலையைக் காப்பாற்ற முடியாதா?

ப; அரசாங்கம் போகிற போக்கைப் பார்த்தால் அபிவிருத்திச்சபை வருவதற்கு முன்பே திருகோணமலையை சிங்கள நாடாக்கி விடும் போலிருக்கிறதே! உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்தி, துறைமுக அபிவிருத்தி. தேயிலைக்கைத்தொழிற் பேட்டை, பிரிமா ஆலை இவையனைத்தும் திருக்கோணமலையில் சிங்களவருக்கு வேலைவாய்ப்பு அளித்து. அவர்களை அங்கு குடியேற்றும் திட்டங்கள்தாம். இவை எதுவும் அபிவிருத்திச் சபையின் பொறுப்பில்விடப்பட மாட்டாது;

* * *

எஸ்; இராமச்சந்திரன்,
வவுனியா.

கே; காந்தியடிகளும் மாவட்டஅபிவிருத்திச் சபைகளை ஏற்றதாக கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் கூறுவது சரியா?

ப: காந்தியடிகள் அல்ல— இந்திய தேசிய காங்கிரஸ் ஏற்றது; அவர்கள் ஏற்றது கூட அபிவிருத்திச்சபைகளை அல்ல: மாகாணசுயாட்சியை ஏற்று, மாகாண சட்டசபைகளைக் கைப்பற்றினார்கள். ஆயினும் காந்தியடிகள் காங்கிரஸ் காரர்களின் சட்டசபைப் பிரவேசத்தினால் ஒத்துழையாமைப் போராடடம் சீர்குலைந்து விடுதலை உணர்வு குன்றிவிட்டதாகவே கருதினார், சட்டசபைப் பிரவேசத்தால் விடுதலைப் போராட்டம் பின்தள்ளப்பட்டது என்பதை காந்தியடிகள் ஏற்றுக்கொண்டார், அவர் அனுபவரீதியாகக் கூறிய உண்மையை நாம் ஏன் ஏற்கக் கூடாது; அபிவிருத்திச்சபைகளில் சுயாட்சித்தன்மை கூட இல்லை என்று திரு அமிர்தலிங்கம்அவர்கள் கூறிவிட்டாரே!

கே: வட்டுக்கோட்டைத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பும் தந்தை செல்வா முந்திய அரசுடன் பேச்சுவார்த்தைக்குச் சென்றார் என்று கூறுகிறார்களே!

ப: ஆம் சென்றார்; சுதந்திரத் தமிழீழக் கொள்கை தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கை என்ற அளவில் மட்டுமேயிருந்தபோது பேச்சுவார்த்தைக்குச் சென்றார். ஆயினும் தந்தை செல்வாவின் மறைவுக்குப் பின்னரே கூட்டணியின் கொள்கையாக மட்டுமேயிருந்த தமிழீழக் கொள்கைக்கு தமிழ்மக்களின் ஆணைபெறப்பட்டு அதுமக்கள் கொள்கையாக முக்கிய இலட்சியமாக மலர்ந்தது. இந்த மக்களின் ஆணையைப் பெற்றவர்கள் இன்றைய கூட்டணித் தலைவர்களேதவிர, தந்தை செல்வா அல்ல. மக்களிடமி[illegible] தமிழீழ மீட்புக்கான [illegible]வான ஆணையைத் தந்[illegible] செல்வா பெற்றிருந்[illegible] அதற்கு முரணாகநடந்[illegible]

# சாண் ஏறி முழம்சறுக்கும் சாணக்கியம் வேண்டாம்

வானம் அளந்த விடுதலை வாழ்விழந்தோம்
மானம் இழந்தோம் மதிகெட்டோம் மாற்றார்தம்
மாவட்ட சபையென்ற மாயமான் பின் சென்றே
ஊன உடல் பெருக்க ஈழ உயிர் இழந்தோம்!
தானமா செய்தோம்? தாரையே வார்த்து விட்டோம்

"வீரசுதந்திரம் வேண்டிநின்றார்
 பின்னர் வேறொன்று கொள்வாரோ?
விண்ணில் இரவிதனை விட்டுவிட்டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
 கைகொட்டிச் சிரியாரோ?''

உள்ளூரில் கூட்டணியாய் ஈழத்தில் பழுத்த மரம்
பள்ளத்தில் வீழ்ந்ததுவோ கள்ளத்தால் கவிழ்ந்ததுவோ?
வெள்ளைமனமுடையார் விடுதலையாய் விரிந்த குளம்
உள்ளார்ந்த பிரிவினையால், உவர்த்து வற்றியதோ?

உள்ளத்தில் ஒற்றுமையாய் ஏற்றிவைத்த ஒளிவிளக்கு
கள்ளச் சிங்களத்தின் காற்றினால் அணைந்ததுவோ?
தள்ளாத சுடராய்த் தானுதித்த தமிழ் உணர்ச்சி
பொள்ளார்ந்த புத்தமதப் புகையால் மறைந்ததுவோ?

எள்ளாமை வேண்டுமென்று எமக்குரைத்தஇயக்கம்தான்
தள்ளாமை எய்தித் தலைதடுமாறிநெய்தியதோ?
பள்ளத்தில் வீழ்ந்தார்க்குப் பகலவனாய் நின்ற கட்சி
வெள்ளத்தில் கரைந்ததுவோ? விடுதலையை விற்றதுவோ?

அள்ளக் குறையாத ஈழத்தமிழ் இரத்தம்
உள்ளத்தில் உறைந்ததுவோ? ஓட்டமும் ஓய்ந்ததுவோ?
உள்நெக்கி உயர்ந்த ஈழத்தமிழ்ப் பண்பு
கள்ளத்தால் இறுகிக் கல்லாய்ச் சமைந்ததுவோ?

சில்லறைச் சலுகைபெறச் சுதந்திரத்தைச் சிரமித்தோம்
அல்லலோ வரவில்லை, ஆண்மைக்கு குறைவில்லை,
நல்லோர் ஆதரவும் நலிந்து விடவில்லை,
வல்லோர் உலகெல்லாம் விடுதலைக்கு வாழ்வளிக்க
அல்லும் பகலும் அயராதுழைக்கையிலே—

சின்னத்தனம் பேசி, சிங்களத்தின் அடிபணிந்து
பொன்னம்பலம் செய்த பெரும் பிழையைப்பின்
 தொடர்ந்தே
தன்னல அதிகாரத் தலைவர்கள் தமிழினத்தைப்
பின்னியதம் அரசியலின் பகடைக்காயாக்கி
இன்னும் ஏமாற்ற எம்தமிழர் இடமளிப்பர்.

அடுத்த தேர்தலுக்கு ஆயத்தம் வரும்போது
தொடுத்த போர் என்பார், தோலில் செருப்பென்பார்,
மடுத்த மானம் என்பார், மங்காத தமிழென்பார்,
எடுத்த ஈழம் என்பார், எம்முடைய அரசென்பார்
தடுத்துவிடுவாயோ, தமிழா நீ திருந்தாயோ?

கண்ணீர் மணியாலுன் காலைக் கழுவுகின்றேன்
பண்ணார்ந்த பாவாலுன் பாதம் பணிகின்றேன்
கண்ணார்ந்த விடுதலைக்கும் கரையாத உன்நெஞ்சம்
புண்ணாகப் போனாலும் புகலுகின்ற நல்லுரையை
எண்ணி நீ அரசியலை ஓர்ந்திடுவாய் தமிழ் மகனே!

சாண் ஏறிமுழம் சறுக்கும்
 சாணக்கியம் வேண்டாம்
நாளேதும் இல்லாத
 நாடாளுமன்றத்தில்
வீணாயே விலைபேசி
 விழலுக்கு நீரிறைத்தும்
காணாத விடுதலைக்குக்
 காலந்தான் பதில் கூறும்
பேணாயோ பிறந்த பலன்?
 பிழைக்காதே தமிழ் மகனே!

Watch words for Tamil freedom
If not we, who?
If not now, when?

— கி. ஞானசூரியன்
சிறப்பாசிரியர் 'லண்டன் முரசு,

www.padippakam.com



தமிழீழ விடுதலைக் கொள்கையில் ஊறி, ஒரு அதிதீவிரவாதியாக போராட்ட வீரராக நேற்றுவரை விளங்கிய தலைவர் அமிர்தலிங்கத்தின் இன்றைய போக்கு விடுதலை விரும்பிகள் அனைவரினதும் நெஞ்சைப் புண்ணாக்குகிறது; வேதனைத் தீ இதயத்தை வாட்டுகிறது. அமிர்தலிங்கத்தின் இன்றைய நிலைப்பாட்டுக்குப் பலரும் பலவித அர்த்தம் கற்பிக்கின்றனர். இதோ, இக்கட்டுரையில் திரு. அமிர்தலிங்கத்தை ஒரு கோணத்தில் நின்று ஆராய்கிறார் ஒரு சுதந்திரன் வாசகர்; இக்கட்டுரையில் காணப்படும் கருத்துக்களுக்கு அதை எழுதிய வாசகரே பொறுப்பாவர். ஆயினும் விடுதலை இயக்கம் பற்றிய பல்வேறு சிந்தனைகளுக்கும் சுதந்திரன் களமாக விளங்கிவருவதால், மேற்படி கருத்தையும் இங்கு வெளியிடுகிறோம்.

—ஆசிரியர்.

# ஜே. ஆரை முறியடிக்க

வாயில் தேனை ஊற்றி நாவினால் அதன்
சுவையை அறிந்திருக்கிறேன் மீண்டும் மீண்டும்
தேனைச் சுவைத்து மகிழ்ந்திருக்கிறேன்.
ஆனால்,—
பாரதியார் கூறியதுபோலக்
காதினிலே தேன்வந்து பாயக்கேட்டதில்லை,
அது பாரதியாரின் அதீதக் கற்பனை என்றே
கருதியிருந்தேன்
மின்னாமல் முழங்காமல் அமுத மழை பெய்தது
போல்,
'1982, தைத்திங்கள் முதலாம் நாள்
தமிழுலகம் உவக்கும் பொங்கல் திரு
நாளில்
தமிழீழம் பிரகடனம் செய்யப்படும்'
என்ற அறிவிப்பைக் கண்டபொழுது கேட்ட
பொழுது
தேன் வந்து பாயுது காதினிலே'
என்பது
உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை
என்பதை உணர்ந்து கொண்டேன்;

அனைத்துலகப் பாராளுமன்றமாக இயங்கும்
ஐக்கிய நாடுகள் சபையிலே
வீரத்தோடும் தீரத்தோடும் நுழைந்து,
சிறீலங்காப் பேராளர்களுக்கு அருகே
தமிழீழ நாட்டிற்குரிய இருக்கையை இனங்
கண்டு
அதிலே
தமிழீழ முதல்வரின் பிரதிநிதியாக அமர்ந்து
உரிய நேரத்தில் எழுந்து,
தமிழீழ முழக்கம் செய்தவர்
அஞ்சாமை, கல்வி, துணிவுடைமை
என்ற மூன்று அணிகலன்களையும் பூண்ட
கிருஷ்ணா வைகுந்தவாசன்
அந்த வைகுந்தவாசனே,
1982 இல் தை பிறந்ததும் வழி பிறக்கும்,
தமிழீழம் பிறக்கும்
என்று தமிழீழ முதல்வரின் சார்பில்
உலகமறிய, உலகமுவப்ப
உரத்த குரலிலே கூறிவிட்டார்.

கடந்த ஆண்டு தமிழீழ முதல்வர்
உலகவலம் வந்தபோது
உலக அரங்கிலே பிளவுபட்டுக் கிடந்த
தமிழீழ விடுதலை இயக்கங்களை
ஒன்றிணைத்து தமிழீழ இணைப்புப் பேரவையை
உருவாக்கி
ஐ. நா. புகழ் வைகுந்தவாசனை
அதன் தலைவராக—
பொறுப்பாளராக நியமித்தபோதே
காதினிலே இன்பத் தேன்வந்து பாயும்
என்று எதிர்பார்த்தோம்,
எண்ணிய நாம் திண்ணியராததால்
எண்ணியாங் கெய்திேனும்.

"எனது காலத்தில் விடுதலை கிடைக்கும்
என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்;
எனது காலத்தில் விடுதலை கிடைக்கா
விட்டாலும்
அமிர்தலிங்கத்தின் (தலைமைக்) காலத்தில்
தமிழீழ விடுதலை கிடைக்கும்."
—இது தீர்க்கதரிசி, மூதறிஞர்
தந்தை செல்வா கூற்று.
தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனம் என்றும்
பொய்த்ததில்லை.
அது இன்று மட்டும் பொய்க்குமா?
நேசக்கரம் நீட்டுவது போல நடித்து
மோசம் செய்வது சிங்களப்பேரினவாத மரபு
இதனை உணர்ந்த அமிர் இரட்டைவேடம்மூலம்
தமிழீழ விடுதலையைத் துரிதமாகப் பெற
முடிவு செய்தார்,

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி
ஆகிய நான்கு தொகுதிகளையும் உள்ளடக்கிய
அகன்ற வன்னி
மட்டக்களப்பைத் தொடர்ந்து
சிங்கள ஏகாதிபத்தியத்தின் வலையில் விழும்
ஆபத்து—
—கூட்டணி உள்ளூரில்
தமிழீழ விடுதலைக் கூட்டணி
பாராளுமன்ற - அபிவிருத்திச்சபை தமிழர் கூட்டணி
என இரண்டாக அமைக்கப்பட்டது.
—இளைஞர் பேரவை
தமிழ் மாவட்ட அபிவிருத்தி இளைஞர் பேரவை
தமிழீழ விடுதலை இளைஞர் பேரவை
என இரண்டாக அமைக்கப்பட்டது.
சாணக்கியரும் அரசியல் தந்திரியுமான
தர்மிஷ்டர் ஜே. ஆருக்கு
அனைத்துலக மட்டத்தில்
அதிர்ச்சி வைத்தியம் செய்யும் நோக்குடன்
கிருஷ்ணா வைகுந்தவாசன் மூலமாக

## 1982 பொங்கலன்று
## தமிழீழம் உதயமாகும்

என உலகறியத் தலைவர் அமிர் அறிவித்து
விட்டார்.
ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில்,—
—ஸ்ரீலங்காவினர்
கோட்டையில் தலைநகரை அமைக்கும்போது
தமிழீழத்தார்—
நல்லூர் சங்கிலியன் தோப்பில்
விடுதலைப் பிரவேசம் செய்வார்கள்"
எனத் தமிழ் கூட்டணி சார்பில்—
சாவகச்சேரி நவம் அறை கூவினார்;
1982 பெப்ருவரி 4 ஆம் நாள்
ஸ்ரீலங்காவினர்
ஜெயவர்த்தனக் கோட்டைக்குள்
குடியேறுவர்.
அதற்கு முன்பாகவே,
1982 சனவரி 14 ஆம் நாள்
தமிழீழத்தினர் தமது இறைமையை
பிரயோகித்து

# அமிர் போடும் இரட்டைவேடம்!

தமிழிளைஞர்கள் கேள்வி முறையின்றி
இரவோடிரவாகக் கொலைசெய்யப்படும்
படுபாதகம்—
'போர் என்றால் போர் அமைதி என்றால்
அமைதி'
என்ற தார்மீக சங்கநாதம்—
இத்தனைக்கும் மத்தியில்
ஈழத்தில் தேசிய மன்றம் அமைக்க முடியாத
நெருக்கடி,
தமிழீழம் பிரகடனம் செய்யமுடியாத நிலை,
பாராளுமன்றம்—
மாவட்ட அபிவிருத்தி—
உத்தியோக மோகம்—
இவற்றில் ஊறியவர்கள் எப்படியோ
கூட்டணிக்குள் புகுந்துவிட்டநிலை,
பொதுச்சபையிலும் செயற்குழுவிலும்
அவர்கள் குரல் ஓங்கி ஒலிக்கும் நிலை.
தமிழீழத் தீவிரவாதிகளின் குரல்
நைந்து நலிந்து பலவீனமடைந்தநிலை;
இந்த நிலையில் தான்
உள்ளூரில், தமிழீழத்தில்
அதிர்ச்சி வைத்தியம் செய்யத்
தலைவர் அமிர்தலிங்கம் முன்வந்தார்:
அதன் விளைவு—
தீவிரவாதிகள் இருவரைக் கூட்டணியிலிருந்து
வெளியேற்றும் தீர்மானத்தை
அவர் தாமாகவே முன்மொழிந்தார்
—தீவிரவாத இளைஞர்களை மேலும்
தீவிரவாதிகளாக்கும்
நடவடிக்கைகளில் ஈடுபட்டார்;
இதன் விளைவாக,
அரசு அமைக்க வேண்டும்:
—இதுதான் தமிழீழ முதல்வர் அமிரின்
உறுதியான இறுதியான முடிவு.
அதன் வெளிப்பாடுதான்—
இதயங்கவர்ந்த இலண்டன் பிரகடனம்
எனவே,
கூட்டணியின் பல்வேறு கூறுகளும்
தம்முள் அநாவசியமாக மோதாமல்,
இலண்டன் அறிவிப்பை நடைமுறைப்படுத்த
ஒன்றுபட்டு ஒவ்வொரு கணமும் உழைக்க
வேண்டும்.
அபிவிருத்திச்சபை பற்றி அதிகம் அலட்டிக்
கொள்ளும்
தம்பிகளும் தலைவர்களும்
தலைவர் அமிரின் இதயத்தைப்புரிந்துகொண்டு
தமிழீழ உதயத்திற்குத்
தம்மை அர்ப்பணிக்க முன்வரவேண்டும்.
1982 பொங்கல் நாள்
தமிழீழத்தில்
உதயசூரியன் முன்,
இதய சூரியன்
புத்தரிசிப் பொங்கலுடன்
விடுதலைப் பொங்கலும்
படைக்க
உழைக்க உறுதி பூணுவோம்
பாதிநா டெங்களுக்காகவென் றெழுகவே"

—திருச்செந்தூரன்
நாயன் மார்க்கட்டு,
யாழ்ப்பாணம்.

# தேவநாயகம் மனமாற்றம்!

மட்டக்களப்பு' யாழ்ப்பாணம்' என்ற குறுகிய பிரதேசவாதத்தை வளர்த்து, தனது அரசியலை நடத்தி வந்த கல்குடா பா.உ. திரு. கே. டபிள்யூ' தேவநாயகம்: மனப்பான்மையிலிருந்து சற்று விடுபட்டுள்ளார்.

,,மாதுறு ஓயாத்திட்டம் குறித்துச்சிலர் பேசுவது உண்மைக்குப்புறம்பானது ஆகும். அத்திட்டம்' சம்பந்த கொண்டுள்ளேன். எப்படியாவது அங்கு 15000 தமிழ்க் குடும்பங்களை குடியேற்றுவதற்கு வழிசெய்து வைப்பேன்;

,,அவர்கள் [illegible] தொகுதிக்குள் இல்லாவிட்டாலும் மாவட்டத்துக்குள் இல்லாவிட்டாலும்சரி' எங்கிருந்தாவது 15000 "தமிழ்க் குடும்பங்களைக் கொண்டு வந்து குடியேற்ற உறுதிகொண்டிருக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தேவநாயகம் குறிப்பிட்டுள்ளதாக தினபதி (19-9-80) செய்தியொன்று கூறுகிறது. அமைச்சரின் இந்தமனமாற்றம் நிலைத்திருக்கும் என்று நம்பு


## சுதந்திரன் சந்தா

ஒரு வருடச் சந்தா 80-00
ஆறு மாதச்சந்தா 40-00
சுதந்திரன்,
15, மகாத்மாகாந்தி வீதி
யாழ்ப்பாணம்.


படிப்பகம்

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது. [redacted] சுதந்திரன் 28-9-80

SUTANTIRAN 28.9.80

# THAMIL EELAM IN THE YEAR 1982

சம்?

ப; தமிழ் மக்களின் பிரச்
சினையை ஒரு தேசிய இனப்
பிரச்சினையாக அங்கீகரித்து,

1977 ... ஆவணியில் தமிழ் மக்
களின் அபிவிருத்திகளை சிறீ
லங்காவின் ஆக்கிரமிப்புப்
படைகள் அத்துமீறித்தாக்கி
அழிக்கவில்லையா? வவுனியா

முழு
தெளி
தை
தால்,
ருக்க

Whereas, The Thamils of Eelam who number three and a half million Hindus, Christians and Moslems and occupy eight thousand square miles, are forced to live as an oppressed minority in Ceylon (Sri Lanka) where the majority is composed of eleven million Sinhalese, most of whom are Buddhists; and

Whereas, From ancient times two nations, the Sinhalese and the Thamils possessed distinct languages, religions, cultures and clearly demarcated geographic territories until the British, who were characteristically pretending to be oblivious to the differences between these two separate nations, imposed one rule for the purpose of colonial administrative unification; and

Whereas, As was to be expected in 1948 when the British left the island and two unwilling nations were consequently left under a unitary governmental structure, the majority Sinhalese faction subverted democratic principles to become the new masters of the Tamil-speaking people; and

Whereas, One million Thamils on the tea rubber plantations, who prior to independence had enjoyed rights similar to those possessed by other Ceylonese, were disenfranchised and made stateless; and

Whereas, In 1956 the Government passed the official language act which made the Sinhalese the only official language throughout the island, thereby causing severe hardships to several thousand Thamil public servants and migration to foreign lands, and effectively excluding otherwise qualified Thamils from the public services; and

Whereas, Although the plantation Thamils were the descendants of Indians who where brought to Ceylon more than one hundred years ago by the seemingly ubiquitous British planters, and as such were mostly native Sri Lankens who possessed no relationship with the India from which their ancestors hailed, in 1964, the government inhumanely and callously determined to repartriate compulsorily these Thamils, ordering them to depart the land of their birth; and

Whereas, In 1975 foreign-owned estates were nationalised, compelling scores of evicted Thamil workers to become beggars; and

Whereas, Nationalising schools in 1960—61, the government directed its discriminatory policies against non Buddist education as well as the Thamils: and

Whereas, Many Thamil medium schools in Sinhalese majority districts were closed and reopened as Sinhalese institutions, thereby forcing Thamils to study in the Sinhalese medium; and

★ Full text of the resolution adopted at a T. C. C. Meeting held in London on 31.8.80

Whereas, In 1971 a system of standardization of grades was introduced by the government to provide preferential treatment for Sinhalese students and to exclude Thamil medium scholars, a prejudicial scheme which was deliberately concocted to deny merit as the criterion university admissions; and

Whereas, A new constitution, which reiterated that foremost place should be accorded to the Buddhist religion and the Sinhalese language, wa[...] ted without [...] or consultation [...] majority of the Tha[...] presentatives in parliame[...] and;

Whereas, The Thamil people were again not party to the constitution of 1978 which replaced its predecessor of 1972, and

Whereas, The Thamil problem had been already raised at the United Nations General Assembly in 1978 (October 5); and

Whereas, At the instance of the Eelam Thamils, our problem had won further international support as a result of the famous Massachusetts resolution and the Declaration; and

Whereas, The Development Councils Bill passed by the Sri Lanka Parliament in August in 1980 is devised and cunningly intended to enslave the Thamil people for ever and ever; therefore be it.

Resolved, that the Thamil Co-ordinating Committee representing the heart, the soul feelings and aspirations of millions of Thamils all over [...]orld hereby issue this [...]amation that the New [...]ernment of Thamil Eelam [...] come into being on the [...]ngal day, 1982; and

We urge the 60 million Thamils of the world to take cognizance of this day and to participate fittingly in its observance.

Given at the Headquarters of the Thamil Co-ordinating committee, London.

## பொதுக்கூட்டம்

இடம்:- மகாஜனசபை மண்டபம் அளவெட்டி

காலம்:- 28-9-80 (ஞாயிறு) பி. பகல் 6.30மணி.

விடயம்:- அபிவிருத்திச்சபையும் தமிழ் மக்களும்;

உரை நிகழ்த்துவோர்:
திரு. கோவை மகேசன்
திரு. ஆ. சேயோன்
திரு. அ. வரதராசன்
திரு. அ. குமரன்.

கெயிட்டி 22வது வாரம்

கமலஹாசன் (இரு வேடங்கள்) ஸ்ரீதேவி
வி. கே. ராமசாமி, சுந்தரராஜன்,
வீரராகவன், மனோரமா
மற்றும் பலர்
- நடித்த -
கல்யாண ராமன்
(ஈஸ்ட்மன் கலர்)

செல்லமஹால் 5-வது வாரம்

சந்திரமோகன் — கவிதா
- நடித்த -
சிரிக்கும் சலங்கை
(ஈஸ்ட்மன் கலர்)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட்டாரால், யாழ்ப்பாணம், மகாத்மாகாந்தி வீதி, 15-ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1980-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.